பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**31 05 2026** **SUNDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் பல பகுதிகளில் அதிக வெப்பம் நிலவுவதால் மக்கள் அதனை எதிர்கொள்ள அரசுத் துறைகள் அளிக்கும் வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

2. ராணுவப்படையினரும், தொழில் மற்றும் கல்வி நிறுவனங்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று முப்படை தளபதி ஜென்ரல் N S ராஜா சுப்பிரமணி தெரிவித்துள்ளார்.

3. மாநிலங்களவை உறுப்பினர் தேர்தல் வரும் 18-ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், அதற்கான வேட்புமனு தாக்கல் நாளை தொடங்குகிறது.

4. ஈரானுடன் அணுசக்தி ஒப்பந்தம் விரைவில் ஏற்படுத்தப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில், பெங்களூரு அணி இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

நாட்டின் பல பகுதிகளில் அதிக வெப்பம் நிலவுவதால் மக்கள் அதனை எதிர்கொள்ள அரசுத் துறைகள் அளிக்கும் வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — மோடி (1) — 45 Sec. )***

கோடை காலத்தில் மாம்பழங்கள் பற்றி பேசாத வீடே இருக்க முடியாது என்று பிரதமர் கூறியுள்ளார்.

அல்போன்சா, கேசர், நீலம் உள்ளிட்ட பல்வேறு ரக மாம்பழ சாகுபடி குறித்து அவர் பேசினார்.

***(Sound Byte — மோடி (2) — 40 Sec. )***

நெதர்லாந்தில் நடைபெற்ற விழாவில் சோழர்கள் கால தொன்மையான தாமிர பட்டயங்கள் இந்தியாவிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டதாக பிரதமர் கூறினார்.

***(Sound Byte — மோடி (3) — 46 Sec. )***

தமிழகத்தின் நாகர்கோவிலை சேர்ந்த கிரிஜா அம்மா என்ற ஆசிரியரை சந்தித்ததாக பிரதமர் தெரிவித்தார்.

அவர் **15** பள்ளிகளை நடத்தி வருவதாகவும், அதில் சென்னையின் ஜெய்கோபால் கரோடியா இந்து வித்யாலயா பள்ளி மிகவும் முக்கியமானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

***(Sound Byte — மோடி (3) — 51 Sec. )***

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<>>>>>>

ராணுவப்படையினரும், தொழில் மற்றும் கல்வி நிறுவனங்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று முப்படை தளபதி ஜெனரல் **N S** ராஜா சுப்பிரமணி தெரிவித்துள்ளார்.

நாட்டின் புதிய முப்படை தளபதியாக பதவியேற்றபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ராணுவத் திறனை மேம்படுத்த புதுமை கண்டுபிடிப்புகள் முக்கியமானது என்றார்.

நாட்டின் பாதுகாப்புக்கும், இறையாண்மைக்கும் முப்படை வீரர்கள் சிறப்பாக செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

ஓய்வுபெற்ற ராணுவ வீரர்களின் நலனுக்காக இந்திய ராணுவம் உறுதிபூண்டிருப்பதாக அவர் கூறினார்.

முன்னதாக, புதுதில்லியில் உள்ள தேசிய போர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

<<<<<>>>>>>

இந்திய கடற்படையை நவீனமயமாக்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று கடற்படை தலைமை தளபதி அட்மிரல் கிருஷ்ணா சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

புதிய தலைமை தளபதியாக இன்று பதவியேற்றபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் கடல்சார் பாதுகாப்புக்கு இந்திய கடற்படை முக்கியத்துவம் அளிப்பதாக கூறினார்.

நாட்டின் எல்லை பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலனுக்காக இந்திய கடற்படை எப்போதும் தயாராக இருப்பதாக அட்மிரல் கிருஷ்ணா சாமிநாதன் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

மாநிலங்களவை உறுப்பினர் தேர்தல் வரும் **18-**ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், அதற்கான வேட்புமனு தாக்கல் நாளை தொடங்குகிறது.

ஆந்திரா, கர்நாடகா, குஜராத் மாநிலங்களிலிருந்து தலா 4 மாநிலங்களவை பதவியிடங்களும், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசத்திலிருந்து தலா 3 இடங்களும், ஜார்கண்டிலிருந்து 2 பதவியிடங்களும் காலியாக உள்ளன.

தமிழகம் மற்றும் மஹாராஷ்ட்ராவில் தலா ஒரு மாநிலங்களவை உறுப்பினரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலும் நடைபெறவுள்ளது.

தமிழகத்தில், அஇஅதிமுக மாநிலங்களவை உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம், சட்டப்பேரவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டதை அடுத்து, அவர் தமது மாநிலங்களவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

<<<<<>>>>>>

ஒரே நாளில் 15 ஆயிரம் மேற்கூரை சூரிய ஒளி மின் தகடுகள் பொருத்தி சாதனை படைத்துள்ளதாக மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பிரதமரின் சூரியசக்தி இலவச மின்சாரத் திட்டத்தின்கீழ், மகாராஷ்ட்ராவில் மட்டும் நேற்று முன்தினம் 4 ஆயிரத்து 700 மேற்கூரை சூரியஒளி மின் தகடுகள் பொருத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

குஜராத்துக்கு அடுத்தப்படியாக ஆறு லட்சம் மேற்கூரை சூரிய ஒளி மின் தகடு பொருத்தப்பட்ட மாநிலமாக மகாராஷ்ட்ரா உருவெடுத்துள்ளதாக திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

தில்லி சாகேத் மெட்ரோ ரயில் நிலையம் அருகே நான்கு மாடி வணிக கட்டிடம் இடிந்து விழுந்ததில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

காயமடைந்த எட்டு பேர் எயிம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து குறித்து பேசிய தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா, அங்கீகாரம் இல்லாத கட்டடங்களின் உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்துள்ளார்.

<<<<<>>>>>>

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

அரசு பேருந்தும், லாரியும் மோதிய விபத்தில் இந்த விபத்து ஏற்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் விசாகப்பட்டினம் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

<<<<<>>>>>>

ஈரானுடன் அணுசக்தி ஒப்பந்தம் விரைவில் ஏற்படுத்தப்படும் என்று அமெரிக்க அதிபர் டோனல்டு ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த பேட்டியில், பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால், ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று எச்சரித்துள்ளார்.

ஈரான் அணு ஆயுதத்தை வடிவமைப்பதையும், பெறுவதையும் தடுக்க அமெரிக்கா முன்னுரிமை அளித்து வருவதாக அவர் கூறினார்.

ஈரானுடன் அமைதி ஒப்பந்தம் ஏற்படுத்த தாம் விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

**Hormuz** நீரிணையை கப்பல் போக்குவரத்துக்கு திறக்க பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் டோனல்டு ட்ரம்ப் கூறினார்.

<<<<<>>>>>>

இந்தியா — பங்களாதேஷ் எல்லை சோதனைச் சாவடிகளில் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று மேற்குவங்க ஆளுநர் திரு சி வி ஆனந்தபோஸ் தெரிவித்துள்ளார்.

**Bagdogra-**வில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாதுகாப்பு இல்லாத பங்களாதேஷ் உடனான எல்லைப்பகுதி தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கூறினார்.

மேற்குவங்க மாநிலத்தில் உள்ள 300 கிலோமீட்டர் இந்தியா — பங்களாதேஷ் எல்லைப்பகுதியில் மின் வேலி அமைக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு இதற்கான நிதி ஒதுக்கீடு செய்த போதிலும், முந்தைய திரிணமுல் காங்கிரஸ் அரசு எல்லை பாதுகாப்புப் படையினருக்கு நிலம் வழங்கவில்லை என்று திரு சி வி ஆனந்தபோஸ் குற்றம் சாட்டினார்.

<<<<<>>>>>>

கொலம்பியாவில் இன்று அதிபர் தேர்தல் நடைபெறுகிறது.

முதல் சுற்று தேர்தலில் 14 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

50 சதவீதம் வாக்குகள் பெற்றால் நேரடியாக அதிபராக தேர்ந்தெடுக்கப்படுவர்.

50 சதவீதத்திற்கும் குறைவான வாக்குகள் பெற்றால், முதல் இரண்டு இடம் பிடித்த வேட்பாளர்கள் வரும் 21-ஆம் தேதி நடைபெறும் தேர்தலில் போட்டியிடுவர்.

கொலம்பியாவின் தற்போதைய அதிபர் Gustavo Petro அந்நாட்டின் சட்டப்படி மீண்டும் தேர்தலில் போட்டியிட முடியாது.

இடதுசாரி கூட்டணி சார்பாக Ivan Cepeda-வும், வலதுசாரி கூட்டணி சார்பாக Abelardu-வும் போட்டியிடுகின்றனர்.

<<<<<>>>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில், பெங்களூரு அணி, குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

அஹமதாபாத்தில் இப்போட்டி இன்றிரவு 7.30 மணிக்குத் தொடங்குகிறது.

----------------

சிங்கப்பூர் ஓபன் பேட்மிண்டன் போட்டியின், ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இன்று இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் — சிராக் ஷெட்டி இணை, இந்தோனேஷியாவின் **Mohamed Fikri — Fajar Alfian** இணையை எதிர்கொள்கிறது.

<<<<<**END**>>>>>>